# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி
# O.S. No.110/2025

2026 –ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ன்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.04.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அர்ச்சனா (PW– 1) | வயது | : | 30/2026 |
| க/த பெயர் | : | திரு. வீரநாதன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | சித்தமல்லி | வட்டம் | : | மன்னார்குடி |

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது பெற்றோர் பெயர் என்னவென்றால் அம்மா பெயர் விஜயா, அப்பா பெயர் பாலசுப்ரமணியன். எனது அம்மாவின் பிரசவத்திற்கு மருத்துவமனையில் யார் சேர்த்தார்கள் என்றால் எனது தாத்தா சர்குணம், பாட்டி வைரமணி சேர்த்தார்கள். இரவுதான் நான் பிறந்தேனா என்றால் இரவு நேரத்தில் பிறந்ததாக எனது அம்மா சொன்னார். வா.சா.ஆ.10 ஆவணமான பிறப்பு சான்றிதழ் யார் வாங்கியது என்றால் எனது அம்மா வாங்கினார். வா.சா.ஆ.10 ஆவணத்தில் குழந்தையின் பெயர் அர்ச்சனா என்றும், பிறந்த தேதி 15.05.1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
2) வா.சா.ஆ.8 ஆவணமானது 16.04.2026 தேதியில் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணப்படி 16.05.1996 இல் குழந்தை பிறந்ததில் பிறந்த தேதி 16.05.1996 என்று குறிப்பிடாமல் 15.05.1996 இல் பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சாஆ.8 ஆவணத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணப்படி குழந்தையின் பெயரை மட்டுமே மாற்றுவதற்கு வழிவகை உள்ளது, பிறந்த தேதியை மாற்ற முடியாது என மறுத்து மனு திருப்பப்பட்டது என்றால் சரிதான்.
3) வா.சா.ஆ.6 ஆவணமான எனது பள்ளி மதிப்பெண் சான்றிதழில் பிறந்த தேதி 16.05.1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிறப்பு சான்றிதழில் 15.05.1996 என்று பதிவு இருக்கும்போது எனது பள்ளி மதிப்பெண் சான்றிதழில் பிறந்த தேதி 16.05.1996 என்று எதன் அடிப்படையில் மாற்றி குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் உண்மையான பிறந்த தேதியின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

4) பாஸ்போர்ட் எந்த வருடம் நான் வாங்கியது என்றால் 09.03.2017 இல் வாங்கினேன். அந்த பாஸ்போர்ட் வா.சா.ஆ.1 இல் பிறந்த தேதி 15.05.1996 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிறந்த தேதியான 16.05.1996 என்பது பிறப்பு சான்றிதழில் 15.05.1996 என பதிவு இருப்பது எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2023 இல் தெரியவந்தது. எனது உண்மையான பிறந்த தேதி 15.05.1996 தான் என்றும் 16.05.1996 தேதியன்று நான் பிறந்ததாக சொல்வதை 1ம் பிரதிவாதியானவர் மறுக்கிறார் என்றால் சரியல்ல.

5) எனது பெற்றோர் கொடுத்த விபரங்களின் அடிப்படையில்தான் வா.சா.ஆ.10 ஆவணமான பிறப்பு சான்றிதழ் 1ம் பிரதிவாதியால் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையான பிறந்த தேதியை குறிப்பிடாமல் தவறுதலாக 16.05.1996 இல் பிறந்ததாக எனது பள்ளி மதிப்பெண் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 10 ஆண்டுகளுக்கு பிறகு காலம் கடந்து திருத்தவேண்டி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. உரிய காலத்திற்குள் திருத்தம் செய்யாமல் காலம் கடந்து திருத்தம் செய்வது சட்டப்படி ஏற்புடையதல்ல என்பதால் நான் கோருகின்ற பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.20 09:51:10 +0530

District Munsif
Mannargudi.